பக்கங்கள் 14+3

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2056 | பங்குனி 02 ஞாயிற்றுக்கிழமை 16.03.2025 | அதிர்வு 225

## அநுர அரசுக்கு ஏப்ரல் 21 வரை கால அவகாசம்

### பேராயர் அதிரடி எச்சரிக்கை



03

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

## வெளிநாட்டுப் பொறிமுறைக்கு அநுர அரசு அஞ்சுவது ஏன்?

### சபையில் கஜேந்திரகுமார் எம்.பி கேள்வி



“நாட்டில் நல்லிணக்கம் உருவாக வேண்டுமாயின் உண்மைகள் ஆராயப்பட வேண்டும். அந்த நடவடிக்கை நம்பகத் தன்மையானதாக இருக்க வேண்டும். மஹிந்தவின் ஆட்சியில் மக்கள் விடுதலை முன்னணி இராணுவத் தீர்வை தீவிரமாக ஆதரித்தது.

02



## பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை ரணிலால் அடியோடு நிராகரிப்பு

### ஜே.வி.பி. மீது அவர் பாய்ச்சல்

பட்டலந்த விசாரணை ஆணைக் குழுவின் அறிக்கையைத் தான் முழுமையாக நிராகரிப்பதாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இதுதொடர்பில்அவர்இன்றுவெளியிட்டுள்ள விசேட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

02

### மட்டு. கல்லடிப் பாலத்துக்கு அருகில்

## பஸ் - மோ. சைக்கிள் மோதி மௌலவி ஒருவர் மரணம்!







(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு, கல்லடிப் பாலத்துக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் மௌலவி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

03



## முதலாவது விவாதம் ஏப்ரல் 10 ஆம் திகதி

நாடாளுமன்றத்தில் பட்டலந்த விசாரணை அறிக்கை தொடர்பான முதலாவது விவாதத்தை ஏப்ரல் 10 ஆம் திகதியும், இரண்டாம் நாள் விவாதத்தை மே மாதமளவிலும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனை நாடாளுமன்ற அலுவலகம் பற்றிய குழு தெரிவித்துள்ளது.

VOTE

2025இல் உள்ளூர் ஆட்சி யாரிடம்?

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## வெளிநாட்டு...

அவ்வாறான நிலையில் உண்மையில் இந்த அரசாங்கம் பொறுப்புக் கூறும் செயன்முறைக்கு ஆதரவளிக்குமா? என்ற சந்தேகம் காணப்படுகின்றது. கடந்த கால அரசாங்கங்களின் போக்கில் இருந்து அரசாங்கம் விடுபட வேண்டும்."

– இவ்வாறு தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற 2025 ஆம் ஆண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் மற்றும் சுற்றுலாத்துறை அபிவிருத்தி அமைச்சு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

அங்கு அவர் மேலும் உரையாற்றிய தாவது,

"இனமோதல்கள் தொடர்பில் வெளிவிவகாரத்துறை அமைச்சு முக்கிய பங்கு வகிக்கின்றது. அதாவது கடந்த காலங்களில் பயங்கரவாதஎதிர்ப்பு உள்ளிட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், பல பொய்களும் பரப்பப்பட்டுள்ளன.

இந்த அரசாங்கம் வருவதற்கு முன்னர் இந்த அமைச்சு இவ்வாறுதான் இருந்தது. தமிழ் மக்கள் உரிமைகளைக் கோரும் போது அது தொடர்பான போராட்டத்தை பயங்கரவாதம் என்று குறிப்பிட்டு இந்த அமைச்சின் ஊடாகவே பிரசாரங்கள் முன்னெடுக்கப்பட்டன.

தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் அந்த நடவடிக்கைகளை மாற்றியுள்ளதா என்ற கேள்விகள் எழுகின்றன. இன மோதல்கள் தொடர்பாக இதன் அணுகுமுறை என்ன?

எவ்வாறு வெளியுறவுக் கொள்கைகளை பேணப் போகின்றது என்ற கேள்விகள் எழுகின்றன. அத்துடன் தமிழ் மக்கள் மீதான கரிசனை தொடர்பில் சர்வதேச மத்தியில் எழும் விடயங்களுக்கு எவ்வாறு எதிர்வினையாற்ற போகிறது என்பதனையும் பொறுத்திருந்து பார்க்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைக்கான உயர்ஸ்தானிகரால் 2015 ஆம் ஆண்டில் கூற்றொன்று வெளியிடப்பட்டது. அது மிகவும் முக்கியமானது. இலங்கையில் பொறுப்புக்கூறல் மற்றும் நடைபெற்ற விடயங்களை ஆராய்வதற்காக அர்ப்பணிப்பை நான் வரவேற்கின்றேன்.

ஆனால் இலங்கையில் குற்றவியல் சட்ட நடவடிக்கை மற்றும் இவ்வாறான மனித உரிமை மீறல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்கு வலுவான கட்டமைப்பொன்று இல்லை என்றும் இலங்கையில் சாட்சியாளர்களை பாதுகாப்பதற்கான நம்பகமான சட்டமில்லை என்றும் குறிப்பிடப்பபட்டுள்ளது.

அத்துடன் அரச பாதுகாப்பு மற்றும் நீதித்துறை திரிபுப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளது என்றும், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அர்ப்பணிப்புகள் தொடர்பிலும் பல கேள்விகள் உள்ளதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனாலேயே கலப்பு நீதிமன்றத்தை அமைக்க வேண்டும் என்றும், இதில் சர்வதேச நீதிபதிகளும் வழக்கறிஞர்களும் விசாரணைகளில் பங்கெடுத்து மனித உரிமைகள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பான விடயங்களை ஆராயும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும், இலங்கையில் கொல்லப்பட்டவர்களுக்கு இந்த கலப்பு பொறிமுறை கட்டாயம் தேவைப்படுவதாகவும் நிலைமாறுகால நீதி வழங்கல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்குவது தொடர்பிலும் அவரால் கூறப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையின் பின்னர் 2016 ஆம் ஆண்டில் இலங்கை அரசாங்கம் இந்தத் தீர்மானத்துக்கு இணை அனுசரணை வழங்க முன்வந்த போதும் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான பின்னர் அதில் பின்வாங்கி அப்போதைய வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி ஊடாக அந்த தீர்மானத்தை எதிர்தார்.

இதன்போது சர்வதேச தலையீட்டை தடுக்க உண்மை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவை அமைப்பது தொடர்பிலும் உள்நாட்டுபொறிமுறை தொடர்பிலும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கோத்தபாய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரிடம் இருந்து இவ்வாறான பொறிமுறையை எதிர்பார்த்திருக்க முடியாது. என்றாலும் ரணில் விக்கிரமசிங்க இணை அனுசரணை வழங்க முன்வந்து பின்னர் அதில் இருந்து பின்வாங்கியிருந்தார்.

இந்த நாட்டில் நல்லிணக்கம் உருவாக வேண்டுமாயின், என்ன நடந்தது என்று ஆராய வேண்டும். அந்த நடவடிக்கை நம்பகத்தன்மையானதாக இருக்க வேண்டும். அது உள்நாட்டு பொறிமுறையாக இருக்க முடியாது.

சகலவற்றையும் உள்ளடக்கிய பொறிமுறையும், விசாரணை செயன்முறைகளும் முன்னெடுக்கப்பட வேண்டும். இதுவே குறைந்தப்பட்ச தகுதியாக இருக்கின்றது.

இந்நிலையில் தற்போதைய அரசாங்கம் கடந்த கால அரசாங்கங்களின் நடவடிக்கைகளில் இருந்து விடுபட்டு விட்டதா என்ற கேள்விகள் எழுகின்றன. இந்த அரசாங்கம் அதனை விடவில்லை என்பதே எனது கருத்தாக உள்ளது.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ காலத்தில் மக்கள் விடுதலை முன்னணி இராணுவத் தீர்வை காண தீவிரமாக ஆதரித்தது. உண்மையில் இந்த அரசாங்கம் பொறுப்புக்கூறும் செயன்முறைக்கு ஆதரவளிக்குமா? என்று பார்க்க வேண்டும்.

இந்தப் பிரச்சினையின் தன்மையை பார்க்கும் போது உள்ளக பொறிமுறை தீர்வாக அமையாது. கடந்த காலங்களில் இனவாத அரசாங்கங்கள் ஆட்சியில் இருந்தன.

தமிழ் மக்களுக்கு எதிராக தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடத்தப்பட்டுள்ளன. உண்மையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண வேண்டுமானால் கடந்த 77 வருடங்களாக அரசாங்கங்கள் முன்னெடுத்துச் சென்றவற்றை கைவிட வேண்டும்.

நீங்கள் ஏன் வெளிநாட்டு பொறிமுறைக்கு பயப்பட வேண்டும். முதலில் உண்மையை கண்டறிய வேண்டும். நல்லிணக்கத்தை கொண்டுவர நாங்கள் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். ஆகவே கடந்த அரசாங்கங்கள் கடைப்பிடித்த போக்கினை தற்போதைய அரசாங்கம் தொடரக் கூடாது." – என்றார்.

## பட்டலந்த..

"1987 ஆம் ஆண்டு இந்திய – இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, ஜனதா விமுக்தி பெரமுனா (ஜே.வி.பி.) நாடு முழுவதும் பயங்கரவாதத்தை விதைக்க நடவடிக்கை எடுத்தது. அந்த நேரத்தில், ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன நாட்டின் முக்கியமான இடங்களைப் பாதுகாக்கும் அதிகாரத்தை அமைச்சரவை அமைச்சர்களிடம் ஒப்படைத்தார்.

பியகம பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், டீசல் மின் உற்பத்தி நிலையம், மகாவலியிலிருந்து கொழும்புக்கு மின்சாரம் வழங்கும் மையம் மற்றும் வர்த்தக மண்டலம் போன்ற பல பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இருந்தன. அந்தப் பகுதியைப் பாதுகாக்கத் துருப்புக்கள் வரவழைக்கப்பட்டன.

பாதுகாப்புப் படையினர் தங்குவதற்காக இலங்கை உர உற்பத்தி கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான பல கைவிடப்பட்ட கட்டிடங்கள் மற்றும் வீடுகளை வழங்க முடிவு செய்யப்பட்டது.

அந்த நேரத்தில், இலங்கை மின்சார சபை அதிகாரிகள் ஏற்கனவே அங்கு பல வீடுகளில் வசித்து வந்தனர். இந்தக் காலகட்டத்தில், சபுகஸ்கந்த பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு, பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொல்லப்பட்டார்.

அந்த நேரத்தில், பாதுகாப்பு பிரதி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன என்னை அழைத்து, வீட்டு வளாகத்தில் உள்ள வீடுகளை இராணுவம் மற்றும் பொலிஸார் பாதுகாப்புக்காக வழங்குமாறு கேட்டுக்கொண்டார். அதன்படி, அப்போதைய கலைப்பாளர், சம்பந்தப்பட்ட வீடுகளை களனி பொலிஸ் கண்காணிப்பாளர் நலின் தெல்கொடவிடம் மாற்ற நடவடிக்கை எடுத்தார். இதற்கிடையில், ஒரு மாகாண சபை உறுப்பினர், ஒரு கூட்டுறவு சங்கத் தலைவர் மற்றும் ஒரு பொலிஸ் சார்ஜன்ட் உட்பட பலர் படுகொலை செய்யப்பட்டனர்.

அதனுடன், மற்றொரு மாகாண சபை உறுப்பினரின் வீடு தாக்கப்பட்டது. வீழ்ச்சியடைந்த வாழ்க்கையையும் பொருளாதாரத்தையும் மீட்டெடுக்கவும், நாட்டில் அமைதி மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதி செய்யவும் அதிகாரத்தில் இருந்த அரசு நடவடிக்கை எடுத்தது.

1994 ஆம் ஆண்டுக்குப் பிறகு, பட்டலந்த பகுதியில் சித்திரவதைக் கூடம் இருந்ததா என்பதை விசாரிக்க சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஒரு ஆணையத்தைஅமைத்தார்.அதற்குப்பலர்அழைக்கப்பட்டிருந்தனர். நானும் சாட்சியாக அழைக்கப்பட்டேன். அந்த நேரத்தில், நான் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றிக்கொண்டிருந்தேன்.

முழுமையான அரசியல் அவதூறு பிரச்சாரத்தை நோக்கமாகக் கொண்டு பட்டலந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஆனால், அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. அறிக்கையின் முடிவுகளில், ஒரு அமைச்சராக, பொலிஸ் கண்காணிப்பாளர் மூலம் பொலிஸாருக்கு வீட்டு வசதி வழங்குவது சரியாக இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

வீடுகளை ஐ.ஜி.பியிடம் ஒப்படைத்து, அவர் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைப்பதே சரியான முறையாக இருக்க வேண்டும். இந்தச் செயலுக்கு நளின் டெல்கோடாவும் நானும் மறைமுகமாகப் பொறுப்பு என்று ஆணைய அறிக்கை கூறுகின்றது.

ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மற்ற புள்ளிகள் எதுவும் எனக்குப் பொருந்தாது. 1988 ஆம் ஆண்டு காலகட்டத்தில் ஜே.வி.பி. மேற்கொண்ட ஏராளமான பயங்கரவாதச் செயல்கள் தொடர்பான முடிவுகள், முடிவுகள் மற்றும் அவதானிப்புகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளன. பின்னணியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழு அறிக்கையின் மூன்றாவது அத்தியாயம், ஜே.வி.பி. செய்த கொடூரமான பயங்கரவாதச் செயல்களை விரிவாக விவரிக்கிறது. முழு வரலாறும் அதில் சேர்க்கப்பட்டுள்ளது. மேற்கூறியவற்றைத் தவிர, வேறு எந்த குற்றச்சாட்டுகளும் எனக்குப் பொருந்தாது. அந்த அறிக்கையை நான் முழுமையாக நிராகரிக்கிறேன்.

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை மறைத்ததாக யாரும் குற்றம் சாட்ட முடியாது. இது 2000 ஆம் ஆண்டில் நாடாளுமன்ற அமர்வு அறிக்கையாக இருந்தது. ஆனால், இந்த விடயத்தில் யாரும் விவாதம் கோரவில்லை.

குறைந்தபட்சம் ஜே.வி.பி. அப்படி ஒரு கோரிக்கையை வைக்கவில்லை. பலர் அந்த அறிக்கையை ஏற்கவில்லை. எனவே, நாடாளுமன்றத்தில் அதைப் பற்றி விவாதிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று நாம் நம்பலாம்.

இதுவரை ஆட்சிக்கு வந்த எந்த அரசியல் கட்சியும் இந்த அறிக்கையின் மூலம் குறுகிய அரசியல் ஆதாயங்களைப் பெற முயன்றதில்லை என்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்." – என்றுள்ளது.

# அநுர அரசுக்கு ஏப்ரல் 21 வரை கால அவகாசம்

## பேராயர் அதிரடி எச்சரிக்கை



"இலங்கையிலுள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கும் நோக்கிலேயே தற்போதுள்ள ஆட்சியாளர்களை ஆட்சிப் பீடத்துக்கு ஏற்றினோம். ஆனால், அரசியல் கலாசாரத்தில் மாற்றம் ஏற்படுத்தாமலும் எமக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமலும் இருந்து வந்தால் நாம் மீண்டும் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்."

– இவ்வாறு கொழும்பு மறை மாவட்ட பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அநுர அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்தார்.

அத்துடன், லசந்த விக்ரமதுங்க கொலை, பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டமை, கீத் நொயர் தாக்கப்பட்டமை உள்ளிட்ட ஊடகவியலாளர்கள் கொலை செய்யப்பட்டமை, காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பிலும், உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கு தற்போது ஆட்சிபீடம் ஏறியுள்ள அரசாங்கம் இனியும் காலம் தாழ்த்தக்கூடாது. இந்த விடயங்கள் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் இரகசியமாக வைத்துக்கொள்ளாமல், எவருடனும் 'டீல்' போடாமல் உண்மையை வெளியே கொண்டு வருவதற்கு விரைந்து செயற்படுமாறு அரசாங்கத்திடம் பேராயர் கேட்டுக்கொண்டார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியன்றுடன் 6 ஆவது ஆண்டு நிறைவு தினத்துக்கு முன்னதாக உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்று பெற்றுக்கொடுப்பதாகக் கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் நாம் வீதியில் இறங்குவதற்கு பின்னிற்க மாட்டோம் எனவும் பேராயர் குறிப்பிட்டார்.

2025 ஜூபிலி ஆண்டை முன்னிட்டு கொழும்பு மறை மாவட்ட மக்கள் தொடர்பு மத்திய நிலையத்தினால் கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்று சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில், "நாட்டில் ஊடகச் சுதந்திரம், மானுடத்துவம், மக்கள் சுயாதீனமாக இருத்தல் போன்றவற்றை நிலைநாட்டுவதற்கும்,நாட்டில் புதிய கலாசாரத்தைஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்படுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன். இதற்காகத் தான், நாம் உங்களுக்கு ஆட்சி அதிகாரத்தை ஒப்படைத்தோம்.

தற்போது உங்களிடம் உள்ள ஆட்சி அதிகாரத்தை வைத்துக்கொண்டு சட்ட திட்டங்களை திருத்துங்கள். அவற்றை திருத்துவதற்கு இனியும் காலவேளை தேவையில்லை. சட்டம் திருத்தப்பட வேண்டும் என கூறிக்கொண்டு இனியும் கால தாமதம் ஏற்படுத்தாதீர்கள்.

இந்நாட்டில் 1978 அரசமைப்பில் தனி ஒரு நபர் ஒட்டுமொத்த அதிகாரத்தையும் தன்வசப்படுத்துவற்கான சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

இந்த 1978 அரசமைப்பின் பின்னர், ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டமை, ஊடகவியலாளர்கள் காணாமல் ஆக்கப்பட்டமை உள்ளிட்ட ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது. இவற்றுக்கு முழு காரணமும் அரசியல் தலைவர்கள் ஆவர்.

லசந்த விக்கிரமதுங்க கொலை, பிரகீத் எக்னெலியகொட காணாமல் ஆக்கப்பட்டமை, கீய்த் நொயர் தாக்கப்பட்டமை உள்ளிட்ட இன்னும் பல ஊடகவியலாளர்களுக்கு எதிரான வன்முறை சம்பவங்கள் குறித்து எந்தவொரு சட்ட நடவடிக்கைகளும் இல்லை. அவர்களுக்கு நீதியும் இதுவரை கிடைக்கப்பெறவில்லை.

தற்போதுள்ள அரசாங்கமும் இந்த விடயங்கள் தொடர்பில் முறையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றனவா குறித்து எனக்குத் தெரியாது. உயிர்த்த ஞாயிறு தினக் குண்டு தாக்குதல் சம்பவம் குறித்தும் எமக்கு அதனையே கூற வேண்டியுள்ளது.

பலதரப்பட்ட வகையில் எமக்கு வாக்குறுதி அளித்தார்கள். வாக்குறுதிகளை மாத்திரம் வழங்கினர். எனினும், ஒரு வாக்குறுதியை கூட இதுவரை நிறைவேற்றவில்லை.

இனங்களுக்கிடையில், மதங்களுக்கிடையில் பிரிவினைகளை ஏற்படுத்தி நாட்டில் குழப்பங்களை ஏற்படுத்தி, தேர்தல்களின்போது வாக்குகளை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகளே 1948 ஆம் ஆண்டிலிருந்து எமது அரசியல் தலைவர்கள் எமது நாட்டில் செய்து வருகின்றனர்.

இவ்வாறு, எமது அரசியல் தலைவர்கள் இனங்களுக்கிடையே, மதங்களுக்கிடையே குழப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளும் ஒரு சமூகமாக இந்த நாட்டு மக்களை உருவாக்கியதுடன், அவர்கள் சொல்வதை செய்யும் அடிமைகளாக்கினர்.

பட்டலந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் மிகவும் மோசமான சம்பவங்களாகும். ஊடகங்களுக்கு வரம்பு நிலையை கொண்டு வருவதற்கு கடந்த அரசாங்கம் முயற்சித்திருந்தது. நல்ல வேளையாக இது சட்டமாக்கப்படவில்லை. அவை சட்டமாக இயற்றப்பட்டால் எவரும் கருத்து தெரிவிக்க முடியாது வாயை மூடியிருக்க வேண்டியதுதான்.

இவ்வாறு கொண்டு வருவதற்கு காரணம் என்னவெனில், நம்மில் பலர் பக்கச்சார்பாக சிந்திப்பதுதான். சில ஊடகங்களும் பக்கச்சார்பாக செயற்படுவதுண்டு. இவ்வாறு அவர்கள் செயற்படுவதனால் உண்மைத் தன்மையை மக்கள் அறிய முடியாமல் போகின்றது.

இந்த முறைமையை மாற்றியமைக்க வேண்டும். இந்த அரசியல் கலாச்சாரத்தை மாற்றி அமைப்பதற்காகவே, நாம் இந்த அரசாங்கத்தை ஆட்சிபீடம் ஏற்றுவதற்கான காரணமாகும். இந்த அரசியல் கலாசாரத்தில் மாற்றம் ஏற்படவில்லை என்றால் நாம் மீண்டும் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்படும்.

ஆகவே, கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுங்கள். விசேடமாக ஊடகச் சுதந்திரம், மானுடத்துவம், சுயாதீனமாக இருத்தல் போன்றவற்றுக்கு தடையாக இருக்காதீர்கள். இந்த கலாசாரத்தை நிறுத்திவிடுங்கள்.

இலங்கையில், புதிய சிந்தனைகள், புதிய புதிய கலாச்சாரத்தை ஏற்படுத்துவதை நோக்காகக் கொண்டு செயற்படுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக்கொள்கிறேன். இதற்காகவே நாம் உங்களுக்கு ஆட்சி அதிகாரத்தை கொடுத்தோம்.

இதனைச் செயற்படுத்துவதற்கான சட்ட திட்டங்களை மாற்றி அமையுங்கள். மாற்றியமைப்பதற்கு காலம் எடுக்கத் தேவையில்லை. தங்களுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளதாகில், அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவற்றை மாற்றியமைக்க முடியும்.

உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு இனியும் காலம் தாழ்த்தக்கூடாது. இவ்விடயம் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் இரகசியமாக வைத்துக்கொள்ளாமல், எவருடனும் 'டீல்' போடாமல் உண்மையை வெளியே கொண்டு வருவதற்கு தற்போது ஆட்சியுள்ள அரசாங்கம் விரைந்து செயற்படுவது அவசியம்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியன்றுடன் 6 ஆவது ஆண்டு நிறைவு தினத்துக்கு முன்னதாக உயிர்த்த ஞாயிறு தினக் குண்டுத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அவ்வாறு எமக்கு கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் நாம் வீதியில் இறங்குவதற்கு பின்னிற்க மாட்டோம். ஆட்சிப்பீடம் ஏறியதன் பின்னர் கட்டுவப்பிட்டிக்கு வந்து மக்களுக்கு கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவதற்குத் தவறாதீர்கள்." – என்றார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

### பஸ் - மோ.சைக்கிள்...

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற விபத்தில் 42 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தந்தையான காத்தான்குடி முகைதீன் பஸ்ளிவாசல் மௌலவி எம்.எஸ்.எம். ஸபீர் என்பவரே உயிரிழந்துள்ளார்.

கல்முனையில் இருந்து மட்டக்களப்பு நோக்கிப் பயணித்த அரச போக்குவரத்து பஸ் ஒன்று மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பின் பகுதியில் இருந்து பயணித்த மௌலவி உயிரிழந்துள்ளதுடன், மோட்டார் சைக்கிளை செலுத்திய நபர் சிறு காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பஸ் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# நடுவானில் இரண்டு விமானப் பணிப்பெண்களை பாலியல் ரீதியில் துன்புறுத்த முயன்ற பயணி கைது

சிங்கப்பூரில் இருந்து கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வந்து கொண்டிருந்த விமானத்தில் இரண்டு பெண் விமான பணிப்பெண்களைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்த முயன்ற பயணி ஒருவர் விமான நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் அத்துருகிரிய பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

நேற்று சனிக்கிழமை இரவு 10 மணியளவில் சிங்கப்பூரில் இருந்து ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது.




விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்தபோது அதிக மது போதையில் இருந்த சந்தேகநபர் இரண்டு பெண் விமான பணிப்பெண்களைப் பாலியல் ரீதியாக துன்புறுத்த முயற்சி செய்துள்ளார்.

இதன்போது, விமான பணிப்பெண்கள் சம்பவத்தை விமானிக்குத் தெரிவித்ததை அடுத்து, விமான கட்டுப்பாட்டு அறைக்கு தகவல் அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விமானம் விமான நிலையத்தை வந்தடைந்ததும் சந்தேகநபர் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கட்டுநாயக்க பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக இரண்டு விமான பணிப்பெண்களிடம் இருந்தும் வாக்கு மூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியிடம் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேகநபர் அதிக அளவில் மது அருந்தி இருந்தமை உறுதி செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் இலங்கை வான் வெளியில் நடந்ததால், சந்தேகநபர் கொழும்பு இலக்கம் 01 நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# அரச பயங்கரவாதம் மாறாது!

"தடை செய்யப்பட்ட இயக்கத்தின் தூண்டுதலின் அழுத்தம் எதுவாக - எவ்வளவாக - இருந்தாலும், அரசாங்கம் ஒரு போதும் சட்டத்திற்குப் புறம்பான நடவடிக்கைகளை அனுமதித்திருக்கவோ அல்லது தானே இயக்கவோ கூடாது. பயங்கரவாதத்தை அரசின் பயங்கரவாதத்தால் அடக்குவதற்கான முயற்சி உண்மையான கிளர்ச்சியாளர்களை ஒழிப்பதை மட்டுமல்ல, சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடாத பல அப்பாவி இளைஞர்களின் மரணத்தையும் விளைவித்தது."

- இது 37 ஆண்டுகளுக்கு முன்னர் செயல்பட்ட பட்டலந்தை வதை முகாம் குறித்து, பத்து ஆண்டுகள் கழித்து நடைபெற்ற ஜனாதிபதி ஆணைக்குழு விசாரணைகளின் பின்னர் 1998 இல் சமர்ப்பிக்கப்பட்ட அதன் அறிக்கையின் குறிப்புரையில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயம் ஆகும்.

இந்தக் குறிப்புரையில் 'தடை செய்யப்பட்ட இயக்கம்' என்ற இடத்தில் 'ஜே.வி.பி.' என்று பதிவாகி இருந்தது.

பட்டலந்தை வதை முகாம் செயற்பாடுகள் முடிவடைந்து இருபது ஆண்டுகளின் பின்னர் தமிழர்களின் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராட்டம் முடிவுக்கு வந்தது.

இப்போது, பட்டலந்தை வதை முகாம் அறிக்கையின் குறிப்புரையில் மேற்படி 'ஜே.வி.பி.' என்ற இடத்தில் 'தமிழீழ விடுதலை புலிகள்' என்ற பெயரைச் சேர்த்து அந்தக் குறிப்புரையை வாசித்தால் அது இன்றும் கனகச்சிதமாக பொருந்தியிருப்பதைக் காணலாம்.

அரசாங்கம், தான் பயங்கரவாதம் என்று சித்திரிக்கும் ஒரு விடயத்தை அடக்குவதற்காக 'அரச பயங்கரவாதத்தை' கையில் எடுக்கக் கூடாது என்பதைத்தான் இந்த பட்டலந்தை வதை முகாம் குறித்து விசாரணை நடத்திய ஜனாதிபதி ஆணைக் குழுவின் மேற்படி பரிந்துரை சுட்டிக்காட்டுகிறது.

அதுவே, இருபது ஆண்டுகளின் பின்னர் தமிழர்களுடைய சுதந்திரத்திற்கான விடுதலைப் போராட்டத்தை அரச பயங்கரவாதம் மூலம் இலங்கை ஆட்சி பீடம் அடக்கிய போதும் நடைபெற்று முடிந்திருக்கின்றது.

இதில் துரதிஷ்டம் என்னவென்றால், எண்பதுகளின் கடைசியில் கட்டவிழுந்த பட்டலந்தை வதை முகாம் உட்பட்ட அரச பயங்கரவாதம் தொடர்பில் உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டு அம்பலப்படுத்தப்படவில்லை. நீதியும் பொறுப்புக் கூறலும் நிலைநாட்டப்படவில்லை.

அதேதான் தமிழர்களுடைய விடுதலைப் போராட்ட விடயத்திலும் நடைபெற்றது.

ஒரே ஒரு விடயம் வித்தியாசம். எண்பதுகளின் இறுதியில் முடித்து வைக்கப்பட்ட ஆயுதக் கிளர்ச்சியின் போது அரச பயங்கரவாதத்தினால் ஏற்படுத்தப்பட்ட படுகொலைகள், சொத்தழிவுகள், நாசங்களோடு ஒப்பீடு செய்கையில் 2009 வரை, தமிழர்களின் போராட்டத்தை அடக்குவதற்காகப் புரியப்பட்ட அரசு பயங்கரவாதத்தினால் ஏற்பட்ட உயிர், உடமை, சொத்து இழப்புக்கள் பல மடங்குகள் அதிகம்.

இரண்டிலுமே உண்மைகள் வெளிவரவில்லை. நீதி நிலைநாட்டப்படவில்லை. பொறுப்புக் கூறல் முன்னெடுக்கப்படவில்லை. இழப்பீடுகள் வழங்கப்படவில்லை.

தமிழர்களின் உரிமைக்கான போராட்ட விடயத்தில் மீள நிகழாமையும் உறுதிப்படுத்தப்படவில்லை.

ஆனால் ஒவ்வொரு தடவையும் இத்தகைய பிரச்சினைகளைக் கையாளும் பெயரில் அரசாங்கம் முன்னெடுக்கும் அரச பயங்கரவாதம் தண்டிக்கப்படாமல், தங்கு தடையின்றித் தன் கைவரிசியை காட்டிச் சென்றிருப்பதுதான் இதில் துரதிஷ்டம்.

இப்போதும் கூட அண்மையில் பாதாள உலக குழுக்களுக்கும், போதை வஸ்துக் கும்பல்களுக்கும் எதிராக முன்னெடுக்கப்பட்டதாகக் கூறப்படும் 'யுக்திய' அரச நடவடிக்கையின் போதும், அரச பயங்கரவாதம் கட்டவிழவில்லை என்று கூறுவதற்கு இடமில்லை. அந்த அரச பயங்கரவாதத்திற்கும் பொறுப்பு கூறல் எப்போதும் இடம்பெறப் போவதில்லை என்பது நிச்சயம்.

இது விடயத்தில் அச்சமயத்தில் பதில் பொலிஸ் மா அதிபராக இருந்த தேசபந்து தென்னக்கோனுக்கு எதிராக இப்போது ஏதோ நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகக் காட்டப்பட்டாலும், அது அரச பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையாக முன்னெடுக்கப்படாமல், அதிகாரத்தில் இருக்கும் தனிப்பட்ட தரப்புகளின் காழ்ப்புணர்ச்சியில் எடுக்கப்படும் விவகாரமாகவே தென்படுகின்றது.



# மூதூர் இத்திக்குளம் பகுதியில் மாட்டின் மாமிசக் கழிவுகள்!

## நடவடிக்கை எடுக்கக் கோரும் மக்கள்

(எஸ்.கீதபொன்கலன்)

மூதூர் இத்திக் குளத்துக்கு அருகாமையில் மாட்டின் மாமிசக் கழிவுகளை மூதூர் பிரதேச சபை கொட்டியுள்ளதால் பல சுகாதார பிரச்சினைகளுக்கு தாம் முகம் கொடுக்க வேண்டி ஏற்பட்டுள்ளது என்று இத்திக்குளம் மக்கள் கவலை வெளியிடுகின்றனர்.

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள பள்ளிக்குடியிருப்பு கிராம அலுவலர் பிரிவுக்கு உட்பட்ட இத்திக் குளத்துக்கு அருகாமையில் பள்ளம் ஒன்று தோட்டப்பட்டு அதில் வெட்டப்பட்ட மாட்டின் தலைகள் உட்பட மாமிசக் கழிவுகளை நேற்றுக் (15) காலை மூதூர் பிரதேச சபைக்குச் சொந்தமான வாகனம் ஒன்று வந்து கொட்டியுள்ளது என்று அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.



இது தொடர்பில் கிராம உத்தியோகத்தர் உள்ளிட்ட பலருக்கு தொலைபேசி மூலமாக தெரிவித்துள்ளனர் என்றும் கூறினர்.

இதனால் அப்பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்கள் உட்பட அருகில் உள்ள கிராம மக்களும் பல சுகாதார பிரச்சினைகளுக்கு முகம்கொடுக்க வேண்டிவரும்.

அத்துடன் இந்தக் கிராம மக்கள் இந்தக் குளத்தையே குளிப்பதற்காகவும் ஏனைய பல தேவைகளுக்காகவும் பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் எவ்வித அறிவித்தல்களும் இல்லாமல், எவ்வித அனுமதிகளும் பெறப்படாமல் குளத்தின் எல்லைப் பகுதிக்குள் மாமிச கழிவுகளை பிரதேச சபை கொட்டியிருப்பதானது மிகுந்த கவலை அளிக்கின்றது. எனவே மாமிசக் கழிவுகளை கொட்டுவதற்காக மக்களுக்கு பாதிப்பு அற்ற, பொருத்தமான மாற்று இடத்தை பயன்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பாக மூதூர் பிரதேச சபையின் செயலாளரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்டபோது, இது தொடர்பான முறைப்பாடு ஒன்று தனக்கு கிடைத்திருப்பதாகவும் அது தொடர்பில் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பார் என்றும் தெரிவித்தார்.





# யாழ். நகரில் கசிப்பு உற்பத்தி செய்த இடம் ஒன்று முற்றுகை; ஒருவர் கைது!

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையக் குற்ற விசாரணைப் பிரிவு மற்றும் போதைத் தடுப்பு பொலிஸார் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையில், பெரியளவில் கசிப்பு உற்பத்தி நடவடிக்கையில் ஈடுபட்ட இடம் ஒன்று முற்றுகையிடப்பட்டது என்ற யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இந்த திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் 20 லீட்டர் கசிப்பு, ஆறுபரல் கோடா என்பன இதன் போது மீட்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்தியூஸ் வீதியில் உள்ள வீடு ஒன்றில் தொடர்ச்சியாக கசிப்பு உற்பத்தி நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டு வருகிறது என்று கிடைத்த தகவலுக்கு அமைய இந்த சுற்றி வளைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்றும் இதன் போது சந்தேக நவர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ள னர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும், உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.



# தென் புலோலி உபயகதிர்காம ஆலய மகா கும்பாபிஷேகம்!

தென் புலோலியூர் அருள்மிகு உபயகதிர்காம ஆலய தான் தோன்றிய ஸ்ரீ சக்கர சண்முக தேவஸ்தான புனராவர்த்தன அஷ்ட பந்தன பஞ்ச குண்ட பக்ஷ பிரதிஷ்ட மகா கும் பாபிஷேகம் எதிர்வரும் 19 ஆம் திகதி புதன்கிழமை நடைபெறவுள்ளது.

இந்தக் கும்பாபிஷேகத்துக்கான கிரியைகள் நாளை திங்கட்கிழமை காலை ஆரம்பமாகி இடம்பெறும்.

18 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4 மணிவரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் இடம்பெறும். மறுநாள் 19 ஆம் திகதி புதன்கிழமை காலை 9.39 மணி முதல் 11. 38 மணி வரையான சுப மூத்த வேளையில் கும்பாபிஷேகம் நடைபெறும்.



# பெரும்போக வேளாண்மை அறுவடை அம்பாறை மாவட்டத்தில் முன்னெடுப்பு

**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்டத்தில் பெரும்போக வேளாண்மை அறுவடைப் பணிகள் மீண்டும் நேற்று (15) ஆரம்பிக் கப்பட்டுள்ளன.

அண்மையில் பெய்த திடீர் மழை வீழ்ச்சி காரணமாக ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட பெரும்போக வேளாண்மை அறுவடை தடைப்பட்டிருந்தது.எனினும் தற்போது காலநிலை சிரமைந்துள்ளதன் காரணமாக மீண்டும் பொத்துவில், அக்கரைப்பற்று , சம்மாந்துறை, நிந்தவூர், அம்பாறை, இறக்காமம், மத்திய முகாம் ஆகிய இடங்களில் பயிரிடப்பட்ட வேளாண்மை விவசாயிகளால் நெல் அறுவடை இயந்திரங்கள் மூலமாக அறுவடை செய்யப்பட்டு வருகின்றது.

நெல் அறுவடை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், விளைச்சல் கடந்த போகங்களை விட திடீர் மழை வீழ்ச்சி காரணமாக குறைவடைந்த போதிலும் நெல்லுக்கான கேள்வி அதி உச்சத்தில் காணப்படுகின்றது.

இது தவிர தாம் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் கடன்பட்டு வேளாண்மை செய்கை மேற்கொண்ட போதிலும் தமது வேளாண்மை மழையால் பாதிக்கப்படுகிறது என்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

அத்துடன் அறுவடை செய்யப்படும் நெல்லைக் கொள் வனவு செய்வதில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த அரிசி ஆலை உரிமையாளர்களை விட வெளி மாவட்டங்களைச் சேர்ந்த வியாபாரிகளும்,அரிசி ஆலை உரிமையாளர்களுமே அதிகளவில் நெல்லை விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்வனவு செய்து வருகின்றனர்.

இப்பெரும் போக வேளாண்மைச் செய்கையில் கால நிலை மாற்றம் விலைவாசி காரணமாக எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்கவில்லை என விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.



கடந்த சில வாரங்களாக தொடர்ச்சியான மழை பெய்ததன் காரணமாக வயல் நிலங்களில் மழை நீர் தேங்கி நிற்பதால் நெல் அறுவடையில் ஈடுபடுவது சிரமமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

வேளாண்மை அறுவடை இடம்பெறும் நேரத்தில் கடும் மழை ஏற்பட்டதால் தமது வேளாண்மை நீரில் மூழ்கிக் காணப்படுவதால் அறுவடை செய்ய முடியாது உள்ளது என்றும் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏனைய போகங்களை விட இப்பெரும் போகத்தில் விளைச்சல் குறைவடைந்துள்ளதால் பாரிய நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளதாகவும் அடுத்த சிறுபோகத்தில் மீண்டும் எவ்வாறு நெற்செய்கையில் ஈடுபட என்பது பற்றி பிரதேச விவசாயிகள் பெரும் கவலை தெரிவித்தனர்.

இது தவிர அண்மையில் பெய்த மழை மற்றும் காட்டு யானைகளின் வரவால் ஆயிரக்கணக்கான ஏக்கர் வேளாண்மையை அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.




### பெண் வைத்தியர் மீதான பாலியல் வன்கொடுமைக்கு கண்டனம்:

# பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு மன்னார் பெண்கள் வலையமைப்பு கோரிக்கை

## பிரதமருக்கு அவசர கடிதம் ஒன்று அனுப்பிவைப்பு

**(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)**

அநுராதபுரத்தில் பெண் வைத்தியருக்கு நடைபெற்ற பாலியல் வன்கொடுமையைக் கண்டித்தும், பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறும் கோரியும் பிரதமருக்கு அவசர கடிதம் ஒன்றை நேற்று (15) மன்னார் பெண்கள் வலையமைப்பு அனுப்பி வைத்துள்ளது.

அந்தக் கடிதத்தில் பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இன்று நாங்கள் அனைவரும் துயரமான இதயங்களுடன் உங்கள் முன், இலங்கை முழுவதையும் உலுக்கிய சம்பவம் தொடர்பாக எடுத்துரைப்பதற்கு ஒன்று கூடியுள்ளோம்.

அநுராதபுரத்தில் பணியாற்றும் பெண் வைத்தியருக்கு, இராணுவத்திலிருந்து தப்பியோடிய இராணுவச் சிப்பாயால் கத்தி முனையில் இழைக்கப்பட்ட உடல் ரீதியான வன்புணர்வு என்பது, ஒரு தனி மனிதன் மீதான வன்முறையல்ல. மாறாக இது இலங்கையில் வாழும் ஒட்டுமொத்த பெண்களின் கண்ணியம், பாதுகாப்பு, நம்பிக்கை மீது இழைக்கப்பட்ட குற்றச் செயலாகும்.

இந்தக் கொடூரமான வன் செயல் பெண்கள் நலிந்த நிலையில் உள்ளார்கள் என்பதை எடுத்துரைக்கின்றது. அத்துடன் இது சாதாரண பெண்களுக்கு மட்டுமல்ல, தங்களது வாழ்க்கையை ஏனையவர்களின் உயிர்களைக் காப்பாற்ற தங்களை அர்ப்பணித்த வைத்திய மாது மீதும் நடந்தேறியுள்ளது என்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும்.

மதிப்பிற்குரிய பிரதமர் அவர்களே! பெண்களாகிய நாங்கள் வலிமையான மற்றும் உடனடியாக மேன் முறையீட்டை தங்களுக்கு முன்வைக்கின்றோம்.

இந்தப் பாரதூரமான குற்றச் செயலைப் புரிந்த கொடும்பாவி சட்டத்தின் கீழ் மிகவும் கொடூரமான முறையிலும், கடுமையாகவும் தண்டிக்கப்பட வேண்டும். இந்த சம்பவத்திற்கான நீதி உடனடியாகவும், எவ்வித காலதாமதமின்றியும், எதுவித இணக்கப்பாடுகளும் இன்றியும் வழங்கப்படவேண்டும்.

இது ஒரு சம்பவம் தொடர்பானதல்ல, மாறாக இதன் மூலம் ஒரு தெளிவான கருத்து முன்வைக்கப்பட வேண்டும். அதாவது இலங்கையில் இவ்விதமான பாரதூரமான செயல்கள் மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறைகள் எவ்விதத்திலும் பொறுத்துக் கொள்ளப் படமாட்டாது என்பதாகும். பெண்களுக்கான பாதுகாப்பு மற்றும் நீதி முதன்மைப்படுத்த படவேண்டும்.

சட்ட நடைமுறைகள் மீள் ஒழுங்குபடுத்த படவேண்டும், மற்றும் இனிவரும் காலங்களில் ஒரு பெண், அது வைத்தியராக இருக்கலாம், மாணவராக இருக்கலாம் , ஒரு தாயாக இருக்கலாம் அல்லது ஒரு நிபுணத்துவம் வாய்ந்த பெண்ணாக இருக்கலாம், இவர்கள் யாவருமே தங்களது பாதுகாப்புக் குறித்து இனி ஒருபோதும் கவலை கொள்ளக் கூடாது.

இதில் ஆறாத்துயரமாக அமைவது மார்ச் மாதம் உலகளாவிய ரீதியில் அனைத்து பெண்களையும் மேன்மைப்படுத்தவும் பாராட்டவும் அவர்களது சேவைகளுக்காக நன்றியைச் செலுத்தவும் என்பதுடன், மார்ச் மாதம் 8 ஆம் திகதி சர்வதேச மகளிர் தினமாக அனுஸ்டிக்கப்பட்டும் வருகிறது. சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டு இரு தினங்கள் கடந்த நிலையில் இந்த நெஞ்சை உலுக்கும் சம்பவம் நடைபெற்றது மிகுந்த வேதனையளிக்கிறது.

மேலும் இந்த நிகழ்வு மார்ச் மாதத்தின் கொண்டாட்டங்களில் ஒரு காரிருளைப் படரச் செய்துள்ளது.. நாடளாவிய ரீதியில் பெண்களின் மனதில் கடும் கோபத்தையும் துயரத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

உண்மையில் சொல்லப்போனால் பெண்கள் மார்ச் மாதத்தில் மட்டுமல்ல மாறாக அவர்களது வாழ்நாளில் ஒவ்வொரு நாளும் மதிக்கப்படவும் கொண்டாடப் படவும் பாதுகாக்கப்படவும் வேண்டியவர்கள். இந்தத் துயரகரமான சம்பவம், பெண்களாகிய நாங்கள் சம உரிமைக்காகவும் நீதிக்காகவும் இன்னும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியுள்ளது என்பதை உணர்த்துகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் கொந்தளிப்பை ஏற்படுத்தக்கூடிய விடயம் இந்தக் குற்றச்செயலில் ஈடுபட்ட நபர் இராணுவத்திலிருந்து தப்பியோடி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சமகாலங்களில் நடைபெறுகின்ற குற்றச்செயல்களை உற்று நோக்கும் போது காணக்கூடியது யாதெனில் இவ்வாறாக இராணுவத்தில் இருந்து தப்பியோடிய நபர்கள் சமூகங்களில் இழைக்கப்படும் குற்றச்செயல்களில் பெரும் பங்கு வகிக்கின்றன.

இந்த இழிவான செயல்கள் ஆயுதம் தாங்கி பாதுகாப்பில் ஈடுபடுகின்ற

தொடர்ச்சி▼

# பெண்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு மன்னார் பெண்கள் வலையமைப்பு கோரிக்கை

தொடர்ச்சி▼

வர்களின் பொறுப்புடைமையையும் ஒழுக்கத்தையும் கேள்விக் குறியாக் குகின்றது. இந்த நிலையில் அந்தப் பாதுகாப்புத் துறையில் பணிபுரியும் தனிநபர்கள் இவ்வாறான கொடூரமான குற்றச் செயல்களில் ஈடுபடும் போது இலங்கையில் வாழ்கின்ற மக்கள் எவ்வாறு பாதுகாப்பு துறையின் மீது நம்பிக்கை கொள்ளமுடியும்?. இலங்கை அரசு இந்தத் தப்பியோடிய இராணுத்தினர் தொடர்பாக மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு எதிர்வரும் காலங்களில் இவ்வாறான குற்றச் செயல்கள் நடைபெறுவதை முற்றாகத் தவிர்க்கவேண்டும் என்பதை நாங்கள் வலியுறுத்துகின்றோம்.

மேலும், மருத்துவத்துறையில் பணிபுரிகின்ற ஊழியர்கள் தங்க ளது எதிர்பை வெளிப்படுத்தும் முகமாக வேலைஇடைநிறுத்தம் மேற் கொண்டிருப்பது கவலையளிக்கின்ற விடயமாக உள்ளது. பாதிக்கப்பட்ட ஊழியருக்கான நீதியைப் பெற்றுக் கொள்ளுவதற்காக வேலை இடை நிறுத்தம் மேற்கொள்ளுவது மருத்துவ ஊழியர்களின் திண்மை மற்றும் ஒற்றுமையை வெளிப்படுத்துகின்றது.

எனினும் சாதாரண ஒரு தனி மனிதனுடைய அன்றாட வாழ்க் கையில் மருத்துவ சேவை என்பது இன்றியமையாத ஒன்றாகும். இப் புனிதமான மருத்துவ சேவை இலங்கையில் வாழ்கின்ற அனைத்து குடிமக்களுக்கும் அத்தி யாவசியமானது. எனவே அதனை கருத்தில் கொண்டு அனைத்து மருத் துவ ஊழியர்களும் தங்களது பணி இடைநிறுத்தத்தைக்கைவிட்டு மீளவும் சேவையில் இணையுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

மருத்துவ ஊழியர்கள் மட்டு மல்லாது, ஏனைய தொழில்துறை ளைச் சேர்ந்த பெண்கள் மற்றும் ஆண்கள் இலங்கைவாழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டு மீள வும் தங்கள் சேவையை தொடர ஊக்குவிக்கப்படுகின்றார்கள். ஒரு கொடும்பாவியால் இழைக்கப்பட்ட அநீதிக்கு ஏனைய குடிமக்களின் வாழ்வில் சிரமத்தை ஏற்படுத்துவது எவ்விதத்திலும் பொருத்தமான ஒன்றாகக் கருதப்படமாட்டாது என்பது எங்கள் தாழ்மையான கருத்தாகும்.

இறுதியாக, இலங்கை அரசுக்கு நாங்கள் கூறுவது யாதெனில், நீதி விரைவானதாகவும், கண்களுக்கு புலப்படக் கூடியதாகவும் இருக்க வேண்டும். இலங்கையில் வாழும் அனைத்து மக்கள் மற்றும் அனைத்து உலகமக்கள் இந்த விடயத்தை மிகவும் உன்னிப்பாக அவதானிக்கின்றனர்.

எனவே எமது நாடு பால்நிலை வன்முறைகளுக்கு எதிராக மிக வும் கடுமையாக எதிர்க் குரலை எழுப் புகின்றது என்பதை எடுத்துரைப்போம். எந்த ஒரு பெண்ணுக்கும் உரிய நீதி மறுக்கப்படாமல், தாமதமாக்கப்படாமல் கிடைக்க வேண்டும் என்பதை வலி யுறுத்துகின்றோம். மேலும் எமது பிரதமர் ஒரு பெண்ணாக இருப் பதை குறித்து மிகவும் கர்வம் கொள்ளுகின்றோம்.

இலங்கை அரசிடமும், எமது பெண் பிரதமரிடமும் நாம் கேட்டுக்கொள்வது யாதெனில் இந்தச் சம்பவதுக்கான உடனடி நீதி, மற்றும் அனைத்துப் பெண்களுக்குமான பாதுகாப்பு என் பன உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பமையும், மிகமுக்கியமாக இவ்வாறான சம்பவம் இனி ஒருபோதும் நடைபெறக் கூடாது என்பதையும் வலியுத்தி நிற்கின்றோம்.– என்றுள்ளது.






# முன்பள்ளியின் பாலர்களின் சந்தை

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், கோப்பாய் உதயசூரியன் முன்பள்ளியின் பாலர்களின் பாலர் சந்தை வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபர் ஞானப்பிரகாசம் சுலக்சன் கலந்து கொண்டு, பாலகர்களின் திறன்களை ஊக்குவிக்கும் முகமாக பாலர்களிடம் இருந்து பொருள்களை கொள்வனவு செய்தார்.





# பருத்தித்துறை சிவன்கோவில் கும்பாபிஷேகம் நாளை

புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் ஆலய (பருத்தித்துறை சிவன்கோவில்) அருள்மிகு ஸ்ரீ பர்வத வர்த்தனி அம்பாள் வாசல் நூதன திரிதள இராஜகோபுர (தெற்குக் கோபுரம்) மஹாகும்பாபிஷேகம் நாளை திங்கட்கிழமை காலை 9.47 மணிமுதல் 10.45 மணி வரையிலான சுபவேளையில் நடை பெறவுள்ளது.

இதற்கான கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெறும்.

நாளை திங்கட்கிழமை மஹாகும்பாபிஷேகம் நடைபெறும். கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து தசதர சணம், திருக்கதவு திறத்தல், எஜமான் அபிஷேகம், ரக்சபந்தன விசர்சனம், ஆசீர்வாதம் என்பன இடம்பெறும்.

அத்துடன் குரு திருக்காளாஞ்சி விபூதி பிரசாதம் வழங்கல் இடம்பெறும்.

ஆலய பிரதம குருக்கள் சிவஸ்ரீ சோ. ஜெயந்தக் குருக்களின் உதவியுடன் சுன்னாகம் கதிரைமலை சிவன் கோவில் பிரதமகுரு முத்தமிழ்க்குருமணி சர்வேஸ்வரக்குருக்களின் அருளாசியுடன் சைவக் கிரியா சிரோத்தினம் ஆகம வித்தியா கீர்த்தி சிவஸ்ரீ நேசக்குருக்கள் இந்தக் கும்பாபிஷேகத்தை நடத்தி வைப்பார்.

### கல்முனை மாநகர சபை, தெஹியத்தகண்டிய பிரதேச சபை தவிர்ந்த

# 18 சபைகளுக்கான வேட்புமனுத் தாக்கல் அம்பாறை மாவட்டத்தில் நாளை முதல்

(வி.ரி.சகாதேவராஜா)

உள்ளூராட்சி தேர்தலுக்காக அம்பாறை மாவட்டத்தில் கல்முனை மாநகர சபை மற்றும் தெஹியத்தகண்டிய பிரதேச சபை தவிர்ந்த 18 சபைகளுக்கான வேட்பு மனுத் தாக்கல் நாளை ஆரம்பமாகவுள்ளது. அதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தியாகியுள்ளது என்று அம்பாறை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலரும் அரச அதிபருமான சிந்தக அபேவிக்ரம தெரிவித்தார்.

உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக நாளை (17) திங்கட்கிழமை முதல் 20 ஆம் திகதிவரை அம்பாறை மாவட்ட செயலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது .



இந்த மாவட்டத்தில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கை 04 மற்றும் உள்ளூராட்சி சபைகளின் எண்ணிக்கை 20ஆகும்.

ஆனால், கல்முனை மாநகர சபை மற்றும் தெஹித்தக்கண்டிய பிரதேச சபை ஆகிய உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நீதிமன்ற காரணங்களால் தற்போது நடைபெறமாட்டாது. ஏனைய 18 சபைகளுக்கான தேர்தல் நடைபெறும்.

கடந்த 2024 ஜனாதிபதித் தேர்தலுக்காக அம்பாறை மாவட்டத்தில் 555,432 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். அம்பாறை 18,8222 பேர், சம்மாந்துறை 99,727 பேர், கல்முனை 82830 பேர், பொத்துவில் தொகுதியில் 1,84,653 பேரும் வாக்களிக்க தகுதி பெற்றிருந்தனர் என்று மேலும் தெரிவித்தார்.



# திருக்கோவிலில் இல்மனைற் அகழும் பணிகள் அரச அதிபரின் உத்தரவையடுத்து இடைநிறுத்தம்!

(காரைதீவு சகா)

அம்பாறை மாவட்டத்தின் கரையோர திருக்கோவில் பிரதேசத்தில் மீண்டும் இன்மனைற் அகழ்வதற்கு எடுத்த முயற்சிகள் பொதுமக்களின் எதிர்ப்பின் காரணமாக, அம்பாறை மாவட்ட அரச அதிபர் சிந்தக அபேவிக்ரமவின் உத்தரவையடுத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

அரச அதிபர் சிந்தக அபேவிக்ரமவின் உத்தரவு அறிவித்தலை திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் களத்துக்குச் சென்று உரிய அதிகாரிகளிடம் காட்டியதையடுத்து அகழ்வுப் பணி தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் க.கோடீஸ்வரனும் சமூகமளித்திருந்தார்.

தாண்டியடி பகுதியில் புவிச்சரிதவியல் அதிகாரி மற்றும் தன்சிலா கம்பனியின் உத்தியோகத்தர் ஆகியோருடன் நாடாளுமன்ற உறுப்பினர், பிரதேச செயலாளர் மற்றும் பொது மக்கள் கலந்துரையாடினர்.

இறுதியில், தற்போது இந்த அகழும் பணியை அரச அதிபரின் உத்தரவையடுத்து தற்காலிகமாக நிறுத்துவது என்றும், உள்ளூராட்சி தேர்தல் முடிந்த பிறகு பிரதேச செயலகத்தில் இரு சாராரும் சமூகமளிக்கும் பொதுக் கூட்டத்தில் இப் பணியை தொடர்ந்து மேற்கொள்வதா? முற்றாக இடைநிறுத்துவதா? என்ற தீர்மானம் மேற்கொள்ளப்படும் என்று முடிவு எட்டப்பட்டது.

அதனையடுத்து இரு சாராரும் கலைந்து சென்றனர்.

இருந்தும் குறித்த இயந்திரம் அகற்றப்பட வேண்டும் என்று பொது மக்கள் கேட்டுக் கொண்டனர். இல்லாவிட்டால் அலுவலகம் முன்பாகச் சத்தியாக்கிரகம் இருப்போம் என்று தெரிவித்தனர்.

அதேவேளை, இல்மனைற் அகழ்வுக்கு பொறுப்பான தம்சிலா எக்ஸ்போர்ட் கம்பனி நிர்வாகிகளும் ஊழியர்களும் தமது அலுவலகம் அமைந்துள்ள சங்குமண்கிராமம் உமிறி எனும் கிராமத்தில் குறித்த இல்மனைற் அகழும் இயந்திரத்தை நிறுத்தி வைத்துள்ளனர்.

மக்கள் விரும்பாத முயற்சியை நீங்கள் தொடர்ந்து செய்கிறீர்கள . நாங்கள் அதாவது பொது மக்கள் இதனை முற்றாக எதிர்த்து வந்திருக்கின்றோம். எனவே இந்த நிலையில் இப்பொழுது தேர்தல் காலம். எனவே இப்படியான வேலை இன முரண்பாடுகளை தோற்றுவிக்கலாம். எனவே இம் முயற்சியை கைவிடுங்கள். இதனை நிறுத்தி விட்டு நீங்கள் பாதுகாப்பாக வெளியேறுங்கள் என்று அங்கு பாதுகாப்பில் இருந்த இளைஞர்கள் தெரிவித்தனர்.

கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பு எமது பிரதேசத்துக்கு ஆஸ்திரேலிய நிறுவனம் ஒன்றுவந்து எமக்குத் தெரியாமல் இல்மனைற் அகழ்வுப்பணிக்கான ஆரம்ப வேலையை மேற்கொள்ளத் தலைப்பட்டனர்.

அப்போது பொது மக்கள் கிளர்ந்தெழுந்து எதிர்ப்புத்



தெரிவித்தனர். அதுமட்டுமல்ல மணிக்கூட்டுக் கோபுரத்தில் இருந்து பாரிய எதிர்ப்புக்கு மத்தியில் ஊர்வலத்தை நடத்தி பிரதேசசெயலரிடம் மகஜரும் கையளித்தோம். அத்துடன் அத்திட்டம் கைவிடப்பட்டது.

திருக்கோவில் பிராந்தியத்தில் இன்மனைற் அகழ்வதற்கு மக்கள் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர். திருக்கோவில் பிரதேச செயலாளர் மற்றும் பிரதேச சபைக்கு ஏகப்பட்ட முறைப்பாடுகள் எதிர்ப்புத்தெரிவித்து கிடைக்க பெற்றுள்ளது. பிரதேச சபையில் கண்டனத் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இந்த நிலையில் எமக்குத் தெரியாமல் மக்களுக்கு அறிவிக்காமல் இங்கு மீண்டும் மீண்டும் வந்து செய்கின்ற வேலைக்கு நாம் பூரண எதிர்ப்பை தெரிவிக்கிறோம்.

எந்தக் காரணம் கொண்டும் திருக்கோவில் பிரதேச கனிய வளத்தை சூறையாட அனுமதிக்கமாட்டோம் என்றும் கூறினார்.

அதனிடையே அங்கு வந்த பொதுமக்கள் சிங்களத்திலும் தமிழிலும் மாறிமாறி உரக்கக் குரல் கொடுத்தனர். அவர்கள் கூறியதாவது,

எமது கடலோரவளங்களை இழக்க நாம் தயாரில்லை. இல்மனைற் அகழ்ந்தால் எமது நிலத்தடிநீர் உவர்நீராகும்.இங்குள்ள தென்னைமரங்கள் தொடக்கம் சகல பயிர்பச்சைகளும் கருகும். புல்மோட்டை நல்ல உதாரணம். மற்றது கடலரிப்பு நடக்கும். ஏற்கனவே ஒலுவில் துறைமுகம் கட்டியதனால் இப்பிராந்தியம் படும்பாடு கொஞ்ச நஞ்சமல்ல. எமது திருக்கோவில் முருகனாலயமும் பாதிக்கப்பட்டது. எனவே இன்னமும் நாம் பாதிக்கப்பட விரும்பவில்லை. இங்கு இல்மனைற் அகழவேண்டாம். அதைமீறிச்செய்யமுற்பட்டால் நாம் தீக்குளிப்போம் என உரக்ககத்தினர்.

இவ் இல்மனைற் அகழும் திட்டத்தின்கீழ் அம்பாறை கரையோரத்தில் 46 கி.மீற்றர் தூரம் ஒலுவில் தொடக்கம் உமிரி வரை இன்மனைற் அகழப்படவுள்ளது. அதன்முதற்கட்டமாக உமிரியில் 0.6 கி.மீற்றர் தூரம் அகழ்வதற்கான களவிஜயம் மூன்று நான்கு வருடங்களாக இடம்பெற்று வந்தது தெரிந்ததே.

தற்போது அரச நிருவாகத்தின் கீழுள்ள கோரைக்குறுட் தென்னந் தோட்டப் பகுதியில் இதனை ஆரம்பிக்க முயற்சி நடைபெறுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# இசையமைப்பாளர் ரஹ்மான் வைத்தியசாலையில் அனுமதி

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் இன்று காலை நெஞ்சு வலி காரணமாக சென்னை கிரீம்ஸ் சாலையில் அமைந்துள்ள ஒரு தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

காலை 7:30 மணியளவில் அவர் வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார் எனவும் அங்கு வைத்தியர்கள் ECG மற்றும் எக்கோ கார்டியோகிராம் உள்ளிட்ட பரிசோதனைகள் நடத்தப்பட்டன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேநேரம், அவருக்கு ஆஞ்சி



யோகிராம் பரிசோதனை செய்யப்படலாம் என்று வைத்தியசாலைக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஒஸ்கார் விருது பெற்ற இசையமைப்பாளருக்கு சிறப்பு மருத்துவர்கள் குழு சிகிச்சை அளித்து வருகிறது.

அவரது உடல்நிலை குறித்த கூடுதல் தகவல்கள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக ஏஆர் ரஹ்மானின் சகோதரி பாத்திமா கூறுகையில்,

தொடர் பயணங்களால் அதிக களைப்பில் ரஹ்மான் இருந்தார். அதற்காக எடுக்கப்பட்ட மருத்துவப் பரிசோதனைதான். தற்போது உடல் நலம் சீராக ள்ளது. பயப்படும்படி எதுவும் இல்லை." எனக் கூறியுள்ளார்.

# ஹோலி பண்டிகையின் போது மாணவிகள் மீது இரசாயன வீச்சு

## 4 பேரின் நிலை கவலைக்கிடம்

இந்துமத பண்டிகையான ஹோலி நேற்று முன்தினம் கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

இந்நிலையில், கர்நாடகாவின் கடக் மாவட்டத்தில் உள்ள லக்ஷ்மேஷ்வர் நகரில் ஹோலி கொண்டாட்டம் என்ற பெயரில் பள்ளி மாணவிகள் மீது ரசாயன வண்ணம் பூசப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

பஸ் நிறுத்தத்தில் பாடசாலைக்கு செல்ல காத்திருந்த 7 மாணவிகள் மீது அவ்வழியே மோட்டார் சைக்கிளில் வந்த கும்பல் ஒன்று வண்ணப்பொடியை வீசத் தொடங்கியது.

அந்நேரத்தில், பஸ் வந்ததால் மாணவிகள் உடனே பஸ்ஸில் ஏறி



னர். ஆனால் அந்த கும்பல் விடாமல் துரத்திச் சென்று பஸ்ஸில் ஏறி அந்த 7 மாணவிகள் மீது மேலும் வண்ணப் பொடியை பூசியுள்ளது. அந்த வண்ணப்பொடியில் பசுவின் சாணம், முட்டை, ஃபீனைல் மற்றும் பிற இரசாயனங்கள் கலந்திருந்தாக கூறப்படுகிறது.

இதனால், 7 மாணவிகளுக்கும் மூச்சுத் திணறல் மற்றும் மார்பில் கடுமையான வலி ஏற்பட்டது. உடனே அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

7 பேரில் 4 மாணவிகளின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக என்று கூறப்படுகிறது.

ஏனைய மூவர் உள்ளூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இந்த சம்பவத்தால் பெற்றோர் மற்றும் அவ்வூர் மக்கள் இடையே கொந்தளிப்பான சூழல் நிலவுகிறது. வண்ணம் பூசிவிட்டு தப்பியோடிய அந்த கும்பலை தேடும் நடவடிக்கையில் பொலிஸார் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

# மக்கள் பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டும்

## சந்திரபாபு நாயுடு வலியுறுத்தல்

மக்களின் அன்றாட பிரச்சினைகளை அறிந்து உடனுக்குடன் தீர்வு காண வேண்டும் என்று கட்சி எம்.எல்.ஏக்களுக்கு ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு அறிவுறுத்தினார்.

ஆந்திர மாநிலம், மேற்கு கோதாவரி மாவட்டம், தனுகு சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுடன் முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று ஆலோசனை நடத்தினார். அப்போது அவர் பேசுகையில்,

"நான் 41 ஆண்டுகளுக்கு முன் இதே நாளில்தான் (மார்ச் 15) சட்டப்பேரவையில் முதன்முதலில் அடி எடுத்து வைத்தேன். நான் எங்கு சென்றாலும் கட்சி நிர்வாகிகள்



மற்றும் தொண்டர்களிடம் அத்தொகுதி பிரச்சினைகள் குறித்து கேட்டறிவேன். எம்.எல்.ஏக்களும் இதனை பின்பற்றி மக்களின் அன்றாட பிரச்சினைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காண வேண்டும்

தெலுங்கு தேசம் கட்சி ஆந்திர மாநிலத்தில் ஒரு நிலையான இடத்தை தக்க வைத்துள்ளது. கட்சியை நாம் கட்டுக்கோப்பாக வைத்துக் கொள்வதுடன் மக்கள் பிரச்சினைகளையும் திறம்பட கையாள வேண்டும்.

சூப்பர் சிக்ஸ் திட்டங்களில் சில வற்றை நாம் அமல்படுத்தி உள்ளோம். எஞ்சிய திட்டங்களை மத்திய அரசின் உதவியுடன் கண்டிப்பாக அமல்படுத்துவோம். 2 ஆண்டுகளுக்கு ஒருமுறை கட்சி உறுப்பினர் அட்டையை நாம் புதுப்பித்து வருகிறோம். தற்போது 1.2 கோடி பேர் தெலுங்கு தேசம் கட்சியின் உறுப்பினர்களாக உள்ளனர்." - என்றார்.





# ஏமன் ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீது அமெரிக்கா தாக்குதல்; 24 பேர் பலி

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் வசம் உள்ள ஏமன் நாட்டின் பகுதியை குறிவைத்து தீவிர தாக்குதல் மேற்கொள்ள அமெரிக்க படைக்கு உத்தரவு பிறப்பித்துள்ளதாக அந்த நாட்டின் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியுள்ளார்.

மேலும், ஹவுதி கிளர்ச்சிக் குழுவை ஆதரிப்பதை நிறுத்துமாறு ஈரானை அவர் எச்சரித்துள்ளார்.

ஹவுதி கிளர்ச்சியாளர்கள் கடல் வழிப் பாதையில் கப்பல் போக்குவரத்து மீதான தாக்குதல்களை முற்றிலுமாக நிறுத்தும் வரையில் தங்களது தரப்பில் தாக்குதல் தொடரும் என ட்ரம்ப் கூறியுள்ளார். அமெரிக்க தாக்குதலில் சுமார் 21 பேர் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் கப்பல் மற்றும் வான்வழி போக்குவரத்து, கடற்படை சொத்துக்களைப் பாதுகாக்கவும், சர்வதேச கடல் வழி போக்குவரத்து சுதந்திரத்தை மீட்டெடுக்கவும், தீவிரவாதிகளின் தளங்கள், அந்த அமைப்புகளின் தலைவர்களை இலக்காக கொண்டு நமது தேசத்தின் துணிச்சல் மிக்க போர் வீரர்கள் தற்போது வான்வழித் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர் என ட்ரம்ப் தனது சமூக வலைதள பதிவில் கூறியுள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“ஹவுதி படையினர் அமெரிக்கா மற்றும் உலக நாடுகளின் கப்பல், வானூர்தி மீது தாக்குதல் நடத்தி உள்ளனர். அதனால் அவர்கள் மீது தீவிர தாக்குதலை மேற்கொள்ள அமெரிக்க இராணுவத்துக்கு உத்தரவு பிறப்பித்துள்ளேன்.

முந்தைய ஜனாதிபதி ஜோ பைடனின் ஆட்சியில் அவர்களுக்கு கொடுத்த பதிலடி பலவீனமானதாக இருந்தது. செங்கடல் வழியாக பயணித்த அமெரிக்க போர்க்கப்பல் மீது ஹவுதி படையினர் தாக்குதல் மேற்கொண்ட சம்பவங்கள் உண்டு. கடந்த காலங்களில் ஏவுகணைகளை கொண்டு அவர்கள் நமது வானூர்திகளை தாக்கி உள்ளனர். அதோடு நமது படைகள் மற்றும் நட்பு நாடுகளின் படைகள் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர். இதனால் அமெரிக்கா மற்றும் உலக பொருளாதாரத்துக்கு பல கோடி டாலர்கள் இழப்பு ஏற்பட்டுள்ளது. அதே நேரத்தில் அப்பாவி மக்களின் உயிரும் இதில் பறிபோயுள்ளது.

அமெரிக்க கப்பல்கள் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மேற்கொள்ளும் இது மாதிரியான தாக்குதலை இனி பொறுத்துக் கொள்ள முடியாது. அதனால் அவர்களுக்கு எதிராக எங்களது தாக்குதல் தொடரும். வணிகம் சார்ந்து உலகின் முக்கிய நீர் வழி பாதையில் அவர்களது தாக்குதலை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. உலக நாடுகளின் நீர்வழி போக்குவரத்தை எந்த தீவிரவாத சக்தியும் தடுக்க முடியாது.

நான் ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கு சொல்லிக் கொள்வது ஒன்றே ஒன்றுதான். உங்களது செயல்பாடுகளை இன்றோடு நிறுத்திக் கொள்ளுங்கள். இல்லையென்றால் உங்கள் மீது தீவிர தாக்குதல் நடத்தப்படும். ஹவுதி கிளர்ச்சிக் குழுவை ஆதரிப்பதை ஈரான் நிறுத்திக் கொள்ள வேண்டும்” என ட்ரம்ப் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.இதற்கு தக்க பதிலடி தரப்படும். மேலும், தலைநகர் சனாவில் பொது மக்கள் பலர் உயிர் இழந்துள்ளதாக ஹவுதி கூறியுள்ளது. அமெரிக்கா ஏமன் மீது வான்வழி தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

இரண்டாவது முறையாக ட்ரம்ப் பதவியேற்றது முதல் உலக போர்களை நிறுத்துவதில் மும்முரமாக செயல்பட்டு வருகிறார். இஸ்ரேல் - ஹமாஸ் மோதல், ரஷ்யா - உக்ரைன் போர் போன்றவற்றை அதற்கு உதாரணமாக சொல்லலாம்.

இந்த நிலையில் அவரது பார்வை இப்போது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் பக்கம் திரும்பி உள்ளது. செங்கடல் பகுதியில் பல்வேறு நாடுகளின் கப்பல்கள் மீது ஹவுதி தாக்குதல் நடத்தி வருகிறது.





# அமெரிக்க மாநிலங்களில் சுழிக்காற்று: 20 பேர் பலி; அவசர நிலை அறிவிப்பு

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள சுழிக்காற்று மற்றும் புயல் காரணமாக இதுவரையில் 20 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர்.

அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளைச் சுழிக்காற்று மற்றும் புயல் தாக்கி வருகிறது.

இதன் காரணமாகப் பெருமளவான குடியிருப்புகள் சேதமடைந்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மிசோரியில் சுமார் ஒரு லட்சம் பேர் மின்சாரமின்றி இருப்பதாகக் கண்காணிப்பு சேவை தெரிவித்துள்ளது.

அத்துடன், ஆர்கன்சஸ், இந்தியானா, டெக்சாஸ் மற்றும் மிசிசிப்பி ஆகிய மாநிலங்களில் 10,000 இற்கும் மேற்பட்டவர்களும், மிச்சிகனில் 70,000 பேர் மின்சாரத்தை இழந்துள்ளனர். இதனிடையே, சீரற்ற வானிலை காரணமாக ஜோர்ஜியாவில் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மிகுந்த அவதானத்துடனும் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் ஜோர்ஜியாவின் ஆளுநர் தெரிவித்துள்ளார்.

கனடா முரசு
ஞாயிற்றுக்கிழமை 16/03/2025

## நச்சுவாயுவை சுவாசித்ததால் இந்திய இளைஞர் உயிரிழப்பு

கனடாவில், காரில் உட்கார்ந்திருந்த இந்திய இளைஞர் ஒருவர், நச்சுவாயுவை சுவாசித்ததால் உயிரிழந்துள்ளார்.

இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர் 02




# வாகன கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்பில் 8 பேர் ரொறன்ரோவில் கைது

**கனடாவின் ரொறன்ரோவில் உயர் தர வாகனங்களை கொள்ளையிட்ட சம்பவங்களுடன் தொடர்புடைய 8 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.**

**ஹால்டன் பொலிஸ் புவ்யு (Greater Toronto Area) அதிகாரிகள் குறித்த சந்தேக நபர்களை கைது செய்துள்ளனர்.**

**ஹோட்டல்களில் நிறுத்தி வைக்கப்பட்ட வாகனங்கள் இவ்வாறு களவாடப்பட்டுள்ளன.**

திருடப்பட்ட வாகனங்களை திருடப்பட்ட வாகனங்கள் கண்காணிக்கப்படுகிறதா என்பதைக் கண்டறிய முடியாத "கூல் ஆ.ஃப்" (Cool Off) பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

முக்கிய நெடுஞ்சாலைகளில் உள்ள ஓட்டல் பார்க்கிங் இடங்களில் வாகனத் திருட்டு அதிகரித்ததைத் தொடர்ந்து பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

திருடர்கள் இரவு நேரங்களில் ஹோட்டல் வாகனத் தரிப்பிடங்களை கண்காணித்து, ஒரு ஜன்னலை உடைத்து வாகனத்திற்குள் பிரவேசிப்பதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பின்னர் திருடிய வாகனத்தை ஜீ.பி.எஸ் மூலம் கண்டு பிடிக்க முடியாத வகையில் வாகனங்களில் மாற்றங்களை செய்வதாக தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் 8 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு, மொத்தம் 90 குற்றச்சாட்டுகள் மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது.

# யாருக்கும் பாதுகாப்பு இல்லை என ட்ரம்ப் தொடர்பில் எச்சரிக்கும் கனடா

அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடான கனடாவுக்கே இந்த நிலை என்றால், யாருக்கும் பாதுகாப்பு இல்லை என கருதுகிறது கனடா.

தனது வரி விதிப்பு நடவடிக்கைகளால் உலகையே கலக்கிக்கொண்டிருக்கிறார் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப்.

கனடா, மெக்சிகோ மற்றும் சீனா மீது வரிகள் விதித்துள்ள ட்ரம்ப், ஐரோப்பிய ஒன்றியம் மீது வரிகள் விதிப்பதாக அறிவித்துள்ளார்.

ட்ரம்பின் வரி விதிப்புகளால் பல நாடுகள் பொருளாதார பிரச்சினைகளை எதிர்கொள்ள இருக்கின்றன.

இந்நிலையில், இந்த வாரம் கனடாவில் ஜி 7 நாடுகளின் வெளி 02



# கனடாவின் புதிய அமைச்சரவையில் இரண்டு இந்திய வம்சாவளி பெண்கள்



கனடாவின் புதிய அமைச்சரவையில் இரண்டு இந்திய வம்சாவளி பெண் அமைச்சர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய வம்சாவளியைச் சேர்ந்த அனிதா ஆனந்த் மற்றும் கமல் கேரா கனடாவின் புதிய பிரதமர் மார்க் கார்னி தலைமையிலான அமைச்சரவையில் இடம் பெற்றுள்ளனர்.

லிபரல் கட்சியின் தலைவராக இருந்து, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநராக பணியாற்றிய மார்க் கார்னி, கனடாவின் 30 ஆவது அமைச்சரவையை ஏற்படுத்தினார்.

ஆளுநர் மேரி சைமன் தலைமையில் நடந்த பதவியேற்பு விழாவில் அமைச்சர்கள் பதவியேற்றனர்.

அனிதா ஆனந்த் (வயது 58) - கண்டுபிடிப்பு, அறிவியல் மற்றும் தொழில்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கமல் கேரா (வயது 36) - சுகாதாரத் துறை அமைச்சர் பதவியை வகிக்கிறார்.

டில்லியில் பிறந்த கேரா தனது பள்ளிப்படிப்பிற்குப் பிறகு குடும்பத்துடன் கனடா குடிபெயர்ந்தார். யார்க் பல்கலைக்கழகத்தில் அறிவியல் பட்டம் பெற்றார்.

2015 ஆம் ஆண்டு முதல் Brampton West தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். ஒரு பதிவு பெற்ற நர்ஸாக பணியாற்றிய அவர், கொவிட் 19 நோய்த்தொற்றின் முதல் அலையில், பாதிக்கப்பட்ட முதியோர் இல்லங்களில் சேவையாற்றினார்.

நோவா ஸ்கோஷியாவில் பிறந்து வளர்ந்த ஆனந்த், 1985 ஆம் ஆண்டு ஒன்ராறியோ மாநிலத்திற்கு குடிபெயர்ந்தார்.

அரசியல் நிபுணர், சட்டவியலாளர் என பன்முக திறமைகள் கொண்டவர். முன்னதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர், பொது சேவை மற்றும் கொள்முதல் அமைச்சர் உள்ளிட்ட பதவிகளை வகித்துள்ளார்.

அமைச்சரவை குறைந்த எண்ணிக்கையிலான 13 ஆண்கள், 11 பெண்கள் என உருவாக்கப்பட்டுள்ளதாக மார்க் கார்னி அறிவித்தார்.

# ஒன்டாரியோவில் தட்டம்மை வேகமாக பரவும் அபாயம்



ஒன்டாரியோ மாகாணத்தில் தட்டம்மை நோய்த்தொற்று கடுமையாக பரவி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

தடுப்பூசி போடாதவர்களிடையே இது மிக வேகமாகப் பரவுவதாக பொது சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் 28, அன்று ஆரம்பமான இந்த தொற்று, தற்போது 372 பேருக்கு பாதிப்பு ஏற்படுத்தியுள்ளது.

பெப்ரவரி 27 அன்று 195 பேருக்கு மட்டுமே இருந்த தொற்று, வெறும் சில வாரங்களில் இரட்டிப்பு அளவுக்கு அதிகரித்துள்ளது.

1998 இல் கனடாவில் தட்டம்மை அழிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பிறகு, இத்தகைய பரவலை காணவில்லை.

ஆனால் தடுப்பூசி செலுத்தாத குழந்தைகளும், இளஞ்சிறார்களும் இதை மேலும் பரப்பிவிடுகின்றனர் என ஒன்டாரியோ பொது சுகாதார மையத்தில் பணியாற்றும் மருத்துவர் கிறிஸ்டின் நாவரோ கூறியுள்ளார்.

புதிய தொற்றுகள், முதலில் நியூ ப்ரன்ஸ்விக் மாகாணத்தில் பரவத் தொடங்கி, மனிடோபாவிற்கும் பரவியுள்ளது.

நோய்த் தொற்று தாக்கத்திற்கு உள்ளான 31 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதில் ஒரு குழந்தை தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

## யாருக்கும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யுறவு அமைச்சர்கள் சந்திக்க இருக்கிறார்கள்.

அந்த மாநாட்டின்போது, அமெரிக்காவின் நெருங்கிய நட்பு நாடான கனடாவுக்கே இந்த நிலை என்றால், ட்ரம்பின் கொள்கைகளால் யாருக்கும் பாதுகாப்பு இல்லை என்பதை சக நாடுகளிடம் கூறி அவர்களை எச்சரிக்க இருக்கிறார் கனேடிய வெளியுறவுத் துறை அமைச்சரான மெலானி ஜோலி.

## நச்சுவாயுவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரூபக் சிங் (வயது 25). சில ஆண்டுகளுக்கு முன் கல்வி விசாவில் கனடாவுக்கு வந்துள்ளார் சிங்.

பிராம்ப்டனில் தான் தங்கியிருந்த வீட்டுக்கு தாமதமாக வந்த சிங், கேரேஜில் காரை நிறுத்திவிட்டு, காருக்குள் அமர்ந்தபடியே மொபைலில் தன் பெற்றோரை அழைத்து அவர்களிடம் பேசிக்கொண்டிருந்திருக்கிறார்.

குளிர் காரணமாகவோ என்னவோ, கார் எஞ்சினை அணைக்காமலே, மொபைலில் பேசிக்கொண்டே இருந்திருக்கிறார் சிங்.

கேரேஜ் கதவு மூடியிருக்க, காரிலிருந்து வெளியேறிய கார்பன் மோனாக்சைடின் அளவு காருக்குள் அதிகரித்துள்ளது.

அதனால், மூச்சுத்திணறல் ஏற்பட்டு காருக்குள்ளேயே உயிரிழந்துவிட்டிருக்கிறார் சிங். இந்த துயர சம்பவம், சிங் குடும்பத்தார் மற்றும் நண்பர்களிடையே பெரும் சோகத்தை உருவாக்கியுள்ளது.





# அமெரிக்க விமானங்களை வாங்கும் முடிவை கைவிடுகின்றது கனடாவின் புதிய அரசாங்கம்

ட்ரம்ப் நிர்வாகம் வரிகளால் மிரட்டி வரும் நிலையில், அமெரிக்காவில் தயாரிக்கப்படும் எப் - 35 போர் விமானங்களை வாங்கும் முடிவை கனடாவின் புதிய அரசாங்கம் கைவிடும் என்றே தகவல் வெளியாகியுள்ளது.

இந்த தகவலை கனேடிய பாதுகாப்பு அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளமையால், இது உறுதி செய்யப்பட்ட முடிவென்றே கூறப்படுகிறது.

அமெரிக்க எப் -35 போர் விமானங்களை வாங்குவதற்கான சாத்தியக் கூறுகளை மறுபரிசீலனை செய்வதாக ஐரோப்பிய நாடான போர்த்துகல் கூறிய இரண்டு நாள்களுக்குப் பிறகு கனடாவின் இந்த முடிவு வெளியாகியுள்ளது.

மேலும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தொடங்கிய வரிப் போர் மற்றும் அட்லாண்டிக் கூட்டணியில் குழப்பத்தை ஏற்படுத்தும் வகையிலான அவரது நடவடிக்கைகள் மீது சர்வதேச அளவில் கோபம் அதிகரித்து வரும் நிலையிலேயே போர்த்துகல் இந்த முடிவுக்கு வந்துள்ளது.

அனைத்து கனேடிய பொருள்களுக்கும் 25 சதவீத வரிகளை விதித்து அமெரிக்காவின் வடக்கு அண்டை நாடான கனடாவை ஜனாதிபதி ட்ரம்ப் தடுமாற வைத்தார். அத்துடன் கனடாவை 51 ஆவது அமெரிக்க மாகாணமாக மாற்ற பரிந்துரைப்பதன் மூலம் தொடர்ந்து கனேடியர்களை கோபப்படுத்தியுள்ளார்.

இந்த நிலையில், கனடாவில் புதிதாக பொறுப்பேற்ற பிரதமர் மார்க் கார்னி, அமெரிக்கா உடனான எப் - 35 ஒப்பந்தம், தற்போதுள்ள நிலையில், கனடாவிற்கு சிறந்த முதலீடா என்பதை தீர்மானிக்க பாதுகாப்பு அமைச்சகத்திடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

மட்டுமின்றி, கனடாவின் தேவைகளை சிறப்பாக பூர்த்தி செய்யக்கூடிய வேறு வழிகள் இருந்தால் அதையும் பரிந்துரைக்கவும் அவர் கோரியுள்ளார். கடந்த 2023 ஜனவரி மாதம், அமெரிக்காவின் மிகப்பெரிய பாதுகாப்பு நிறுவனமான லாக்ஹீட் மார்டினுடன் மொத்தம் 19 பில்லியன் கனேடிய டொலர் மதிப்பிலான 88 எப் - 35 போர் விமானங்களை வாங்குவதற்கான ஒப்பந்தத்தில் கனேடிய அரசாங்கம் கையெழுத்திட்டது.

அத்துடன் 16 விமானங்களுக்கான தொகையை ஏற்கனவே கனேடிய நிர்வாகம் செலுத்தியுள்ளது. இந்த நிலையில் அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ள கனேடிய நிர்வாகம், அமெரிக்கா உடனான இந்த ஒப்பந்தம் ரத்து செய்யப்படவில்லை,

ஆனால் மாறிவரும் சூழலைக் கருத்தில் கொண்டு நாம் நமது முடிவுகளை முன்னெடுக்க வேண்டும், மேலும் ஒப்பந்தம் அதன் தற்போதைய வடிவத்தில் கனேடியர்கள் மற்றும் கனேடிய ஆயுதப் படைகளின் நலன்களுக்காக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனிடையே, போர்த்துகல் நிர்வாகமும், அமெரிக்க எப் - 35 போர் விமானங்கள் மற்றும் ஐரோப்பிய விமானங்கள் இரண்டையும் ஆய்வு செய்து வருவதாக குறிப்பிட்டுள்ளது.

இதனால் கனடா மற்றும் போர்த்துகல் நிர்வாகங்கள் எப் - 35 போர் விமானங்கள் தொடர்பில் ட்ரம்ப் நிர்வாகத்திற்கு கடும் அழுத்தம் அளிக்கக் கூடும் என்றே கூறப்படுகிறது.

